நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 17.12.2021

<u>சாத்தூர் நகர்மன்ற அவசரக் கூட்டம்</u>

நிகழும் மங்களகரமான ஆண்டு பிலவ வருடம் மார்கழி 02 ஆம் நாள் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய பொருட்கள் விவரம் பின்வருமாறு.

முன்னிலை : செல்வி. வே.நித்தியா, பி.டெக்., எம்.பிஏ.,
தனி அலுவலர்,
சாத்தூர் நகராட்சி.

<u>பொருள் எண்: 1</u>

இந்நகரட்சியில் வருவாய் பிரிவில் வருவாய் உதவியாளராக அனுமதிக்கப்பட்ட பணியிடம் ஆறு பணியிடமாகும். அதில் தற்போது ஐந்து வருவாய் உதவியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் இந்நகராட்சியில் திரு.ஜி.ராக்கப்பன், வருவாய் உதவியாளர் வயது முதிர்வின் காரணமாக 31.05.2013 அன்று ஓய்வு பெற்றுள்ளார். அப்பணியிடம் 01.06.2013 முதல் காலியாக உள்ளது. மேலும் காலியாக உள்ள வருவாய் உதவியாளர் பணியிடத்தினை கருணை அடிப்படையிலோ அல்லது பணிமாறுதல் அடிப்படையிலோ வரிவசூல் பணியினை கருத்தில் கொண்டு நிரப்பம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கும், பிரேரணை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.835/2018/சி1)

நகர்மன்றத் தீர்மானம் எண். 869, நாள்: 17.12.2021
தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

(ஒம்) செல்வி. வே.நித்தியா, பி.டெக்., எம்.பிஏ.,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
சாத்தூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
சாத்தூர் நகராட்சி.